*2021 செப்டம்பர் 3*]

*துறை அமைச்சர் அவர்களுடைய கலந்தாலோசனைக் கூட்டத்திலும் அதற்கான மனுவினை அவர்களிடத்தில் தந்திருக்கிறோம். இந்த ஆண்டில் அந்தப் பணிகள் துவங்குவதற்கு ஏதேனும் திட்டம் இருக்கிறதா என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டு, அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, நான் மதுரைக்கு ஆய்வுக் கூட்டத்திற்குச் சென்றிருந்தபோது அந்தக் கருத்தை வலியுறுத்தியதோடு மட்டுமல்லாமல், என்னிடம் கடிதமும் தந்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர் (திட்டம்) அவரிடத்தில் அந்தக் கடிதத்தைக் கொடுத்து, திட்ட மதிப்பீடெல்லாம் தயாரிக்கச் சொல்லியிருக்கிறேன். திட்ட மதிப்பீடு வந்தவுடனேயே, நிதித் துறையினுடைய செயலாளரிடத்தில் கலந்துபேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு அந்தப் பாலம் கட்டுவதற்கு, இந்த ஆண்டே முன்னுரிமை அளிக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

**19—**

## குடமுழுக்கு

***1923—திரு. மா. சின்னதுரை:**

*மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஒன்றியம், மங்களாக்கோவிலில் உள்ள சிவன் கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருந்த என்னை,*

[2021 செப்டம்பர் 3

கேள்விகளுக்குப் பதில் சொல்கின்ற ஓர் உயர்ந்த நிலையில் வைத்து, அழகு பார்க்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டம், மங்களாக்கோவில் அருள்மிகு ஆதி மத்தியார்ஜுனேஸ்வரர் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்வதற்காக மண்டல அளவிலான தொல்லியல் துறை அனுமதி பெறப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு நீதியரசர் அவர்கள் தலைமையிலே இருக்கின்ற மாநில அளவிலான தொல்லியல் துறையினுடைய அனுமதியையும் பெற்று, கூடியவிரைவில் அந்தத் திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் தொடங்கப்பட்டு, கும்பாபிஷேகமும் நடத்தப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.*

**திரு. மா. சின்னதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கந்தர்வகோட்டை தொகுதியில் இருக்கிற அந்தக் கோயில் 100 ஆண்டுகள் பழமைவாய்ந்த கோயில். 2009 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, இன்றைய முதல்வர் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, குடமுழுக்கு நடைபெற்றது. அதற்குப்பிறகு 12 ஆண்டுகளாகக் குடமுழுக்கு நடைபெறவில்லை. அதற்கு நிறைய வருவாய் இருக்கிறது. ஏன் அத்தகைய நடைமுறைகள் செய்யப்படவில்லை என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறை சார்ந்த ஆய்வுக் கூட்டத்தைக் கூட்டுகின்றபோது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 12 ஆண்டுகள் கடந்த நிலையில் இருக்கின்ற, ஆகமநெறிப்படி திருப்பணிகள் செய்ய வேண்டிய திருக்கோயில்களையும் அதேபோல் ஏற்கெனவே திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் கடந்தும்கூட இன்னும் திருப்பணிகள் நடைபெறாத திருக்கோயில்களையும் ஆய்வு செய்து இன்னார், இனியவர் என்று பார்க்காமல், அனைத்துத் திருக்கோயில்களிலும் திருப்பணிகள்

*2021 செப்டம்பர் 3]*

*மேற்கொள்ள உத்தரவிட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியதற்காக இதனை நான் சொல்ல வருகிறேன். இந்தத் திருக்கோயிலைப் பொறுத்தளவில், ஆண்டுக்கு பசலி என்பது மொத்தமாக 21 ஆயிரம் ரூபாய்தான் வருகின்றது. ஆகவே, திருக்கோயில் நிதி இல்லாவிட்டாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாராள மனதோடு இருப்பதால், இந்தத் திருக்கோயில் திருப்பணி உடனடியாக மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.*

**திரு. மா. சின்னதுரை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், கோயில் கூடாது என்று தெரிவிக்கவில்லை. அது கொடியவர்களின் கூடாரமாக ஆகிவிடக் கூடாது என்றுதான் குறிப்பிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கோயிலுக்கு 100 ஏக்கர் நிலம் சொந்தமாக இருக்கிறது. 100 ஏக்கர் நிலத்திலிருந்து ஆண்டொன்றுக்கு 21 ஆயிரம் ரூபாய்தான் வருவாய் வருகின்றது என்று சொன்னால், அந்த 100 ஏக்கர் நிலங்களை வைத்திருப்பவர்கள் கோயிலுக்கும் பணம் செலுத்தாமல், அறநிலையத் துறைக்கும் வருவாயைச் செலுத்தாமல், அந்தப் பணத்தினால் எவ்வித பயன்பாடும் இல்லாமல் இருப்பதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்குமா அல்லது அந்த நிலங்களை குத்தகை/சாகுபடி செய்து, நிலமற்ற ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் நஞ்சையும் இருக்கின்றது, புஞ்சையும் இருக்கின்றது. இதில் விவசாய நிலம் என்று எடுத்துக்கொண்டால், 5.81 ஏக்கர்தான் விவசாயம் செய்வதற்கு உகந்ததாக இருக்கின்ற நிலம்.*

*முற்பகல் 10–30*

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், ஆத்திகர், நாத்திகர் இருவரையும் ஒன்றாகக் கருதி, ஒருசேர*

அழைத்துச் செல்கின்ற முதல்வர் என்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், திருக்கோயில்களின் இடங்களைத் திருக்கோயில்களுக்கு வருவாயின்றி யாரேனும் ஆக்கிரமித்திருந்தால், திருக்கோயிலுக்கு வரவேண்டிய வருமானம் மடைமாற்றம் செய்யப்பட்டிருந்தால், உடனடியாக அதுகுறித்து ஆய்வு செய்து, அதன்மீது உறுதியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு அறிவுறுத்தியிருக்கின்றார்கள். நாளைய தினம் மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தில் எவ்வளவு நிலங்கள் இதுவரை கைப்பற்றப்பட்டிருக்கின்றன என்பதைத் தெளிவாகக் கூறவிருக்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.

**திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். என்னை இரண்டாவது முறையாக சுமார் 35,100 வாக்குகள் வித்தியாசத்தில், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.

**திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:** தொடர்ந்து ஐந்தாவது முறையாகவும் இரட்டை இலைச் சின்னத்தில் வெற்றிபெற வைத்த மேலூர் தொகுதி மக்களுக்கு எனது கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதி, மேலூர் நகரிலுள்ள பழமைவாய்ந்த சிவன் கோயிலுக்கும், திருச்சுனை சிவன் கோயிலுக்கும், குடமுழுக்கு செய்து தரப்படுமா என்பதை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

*2021 செப்டம்பர் 3]*

**மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்று முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பதில் சொல்கின்றபோது இன்னார், இனியவர் என்று பாராமல், எங்கெல்லாம் 12 ஆண்டுகள் முடித்து ஆகம விதியின்படி திருப்பணி நடைபெறவில்லையோ அந்தக் கோயில்களையெல்லாம் எடுத்து, திருப்பணி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள் என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் தற்போது கேட்ட இரண்டு கோயில்கள்கூட நாளைய தினம் அறிவிப்பிலே இடம்பெறலாம். அப்படி இடம்பெறவில்லையென்றால், தொடர்ந்து இந்தத் திருப்பணிகளுக்கு அனுமதி தருகின்ற பணியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடுக்கிவிட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இரண்டு சிவன் கோயில்களும் நிச்சயம் கூடியவிரைவில் திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

**திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகப் பிரசித்திபெற்ற, வரலாற்றுச் சிறப்புமிக்க அன்னை மீனாட்சியம்மன் திருக்கோயிலின் ஒரு பகுதி கடந்த காலத்தில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்டபோது, அதற்காக பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய அறிவுறுத்தலின்படி, மாண்புமிகு முன்னாள் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அரசாணை வெளியிட்டு, நிதியொதுக்கீடு செய்து, மாண்புமிகு முன்னாள் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய மேலான ஆய்வின்பேரில், நாமக்கல் மாவட்டத்தில்தான் அதற்குரிய கல் இருக்கிறது என்பது கண்டறியப்பட்டு, நீதிமன்றத்தின் பல தடைகளையெல்லாம்தாண்டி, அந்தக் கல்லை அங்கிருந்து எடுக்கலாம் என்ற நிலை உருவானது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும், ஆய்வு செய்து, அந்தப் பணிகளை முடுக்கிவிட்டிருப்பதாக நாங்கள் செய்திகளின்மூலம் அறிகிறோம். இருந்தபோதிலும்கூட, பல்வேறு தடைகளைத்தாண்டி, அந்தப்*

பணிக்காக மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் நிதியொதுக்கீடு செய்து, அரசாணை வெளியிட்டு, அந்தப் பணிகளையெல்லாம் தொடங்குவதற்காக, நானும் நேரடியாகச் சென்று பூமி பூஜையெல்லாம் செய்யப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *கேள்வியைக் கேளுங்கள்.*

**திரு. ஆர்.பி. உதயகுமார்:** *எப்போது அந்தப் பணிகள் முடிவடையும் என்பது பற்றிய காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா என்பதை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வியாக இருந்தாலும், பதில் கூறுகின்ற கடமை எங்களுக்கு இருக்கின்றது என்பதால் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலிலே 2018 ஆம் ஆண்டு தீ விபத்துச் சம்பவம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து* fire audit *செய்ய வேண்டுமென்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு, அதற்கென்று ஒரு குழுவை அப்போதைய ஆட்சியாளர்கள் அமைத்தார்கள். அந்தக் குழு அமைக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டிலிருந்து, தொடர்ந்து மூன்று ஆண்டுகள் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தார்கள். ஒருமுறைகூட அந்தக் குழு மீண்டும் கூட்டப்படவில்லை.*

*இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன், ஆறு அறிவு படைத்த மனிதர்களுக்கு மட்டுமல்லாமல், ஐந்து அறிவு படைத்த விலங்குகளையும் காப்பாற்ற வேண்டுமென்ற ஜீவகாருண்ய எண்ணம் கொண்ட முதல்வராக இருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மதுரையிலே இருக்கின்ற பார்வதி என்கின்ற யானைக்கு உடல்நிலை சரியில்லையென்றவுடன் நேரடியாகச் சென்று மருத்துவ வசதி ஏற்படுத்தித் தரச்சொன்னார்கள்.*

*தீ விபத்து ஏற்பட்டதற்குப் பிறகு, அங்கு சென்றபொழுது, இதுவரையில் பணிகள் துவக்கப்படாமல் இருந்த வீரராகவன்*

*2021 செப்டம்பர் 3]*

*வாசலை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், அந்த மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் திரு. மூர்த்தி அவர்களோடு நானும் நேரடியாகச் சென்று பார்வையிட்டோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், அரசு ஒன்றும் அதற்கு முழுமையாக நிதியை ஒதுக்கவில்லை. தனியார் பங்களிப்போடு அரசு நிதியும் சேர்த்துதான் அந்தத் திருப்பணியை எடுத்திருக்கின்றோம்.*

*முற்பகல் 10–35*

*ரூ.19 கோடி செலவில் அதற்குண்டான கற்களை அளவிடும் பணி, தயாரிக்கும் பணி, நாமக்கல்லில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அந்தக் கல்லை நாமக்கல்லிலிருந்து இங்கே கொண்டுவரும்போது, சேதாரம் ஏற்பட்டுவிடும் என்பதால், கோயில் வளாகத்திலேயே மண்ணை நிரப்பி அதற்கென்று ஓரிடத்தை ஒதுக்கச் சொல்லியிருக்கின்றார்கள். அந்தப் பணி தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. நீங்கள் விட்டுவிட்ட பணி என்றாலும், அது ஆன்மிகம் தொடர்புடையது. பக்தகோடிகளுக்கு மன நிறைவு வேண்டும் என்பதற்காகவே, அந்தப் பணியினை விரைவாக முடிப்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். இன்னும் ஓராண்டிற்குள் அந்தப் பணி நிறைவு பெறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி, மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**20—**

### பயிற்சி மையம்

***192—திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி:**

*மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இராயபுரம் தொகுதி, 49–வது வட்டம், சோமுசெட்டித் தெருவில் உள்ள மாநகராட்சிப் பள்ளிக்குச் சொந்தமான இடத்தில்*